### 236 மாணவர்களையும், 92 ஆசிரியர்களையும் 6 நாடுகளுக்கு அழைத்துச் சென்ற கல்வி அமைச்சர்

# அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, அக்.21-

திராவிடமாடல் அரசின் முன்னெடுப்பாக 236 மாணவர்களையும், 92 ஆசிரியர்களையும் 6 நாடுகளுக்கு அழைத்துச் சென்றுள்ள பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு வாழ்த்து என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.



அவரது பதிவு வருமாறு:-

**திரைகடல் ஓடியும் திரவியம் தேடு! கடல் தாண்டி நாம் பெறும் பெருஞ்செல்வம் கல்வியைத் தவிர வேறொன்று உண்டா? அத்தகைய கல்வியின் சிறப்பை நமது தமிழ்நாட்டின் மாணவச் செல்வங்களும் ஆசிரியப் பெருமக்களும் உணர்ந்து கல்வி வேட்கை கொள்ள மேற்கொள்ளும் நமது திராவிட மாடல் அரசின் சிறப்பான முன்னெடுப்பு.**

**இந்தப் பதிவு குறித்து நான் தம்பி அன்பில் மகேஸ் அவர்களிடம் பேசிய போது, இதுவரையில் எத்தனை மாணவர்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்றுள்ளோம் எனக் கேட்டேன். ஆறு நாடுகளுக்கு 236 மாணவர்களை அழைத்துச் சென்றுள்ளதாகவும் இந்தப் பயணத்துடன் 92 ஆசிரியர்களும் இந்த வாய்ப்பினைப் பெற்றதாகவும் கூறினார்.**

**இதைக் கேட்டதும் மகிழ்ச்சியால் என் நெஞ்சம் நிறைந்தது! இந்த முன்னெடுப்புகளைச் செய்துவரும் அன்பில் மகேஸ் அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் துறை அதிகாரிகளுக்கும் வாழ்த்துகள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



பெரம்பலூர் மாவட்டம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையம் நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமினை துவக்கி வைத்து தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு, தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை செயலாளர் கொ.வீரராகவராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் பா.விஷ்ணுசந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் ம.பிரபாகரன், அ.சௌந்தரபாண்டியன், ந.தியாகராஜன், செ.ஸ்டாலின்குமார், இரா.மாணிக்கம், சீ.கதிரவன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு:

# முதல்வருக்கு - தமிழ்நாடு பொது நூலகத் துறை அலுவலர் சங்கம் நன்றி!

## நிறுவனத் தலைவர் எம்.ஜி.செல்வம் அறிக்கை!

சென்னை,அக்,21

அரசு ஊழிர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி என்று தமி.ழ்நாடு பொது நூலகத் துறைஅலுவலர் சங்க நிறுவனத் தலைவர் எம்.ஜி.செல்வம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எம்.ஜி.செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய அரசு எப்பொழுதெல்லாம் அகவிலைப்படியினை உயர்த்தி வழங்குகிறதோ, அப்பொழுதெல்லாம் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப்படியினை தொடர்ந்து உயர்த்தி வழங்கியவர் முன்னாள் முதலமைச்சர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இன்றளவும் அவரின் நினைவு கூர்ந்து நன்றி செலுத்தி வருகின்றோம்.

கடந்த அ.தி.மு.க .ஆட்சி காலத்தில் கொரானாவை காரணம் காட்டி, அரசு ஊழியர்களின் அகவிலைப்படியினையும், சலுகைகளையும் வழங்க மறுத்து முடக்கப்பட்டன. அரசு ஊழியர்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளாகினர்.

திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகன், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், முதல்வராகப் பொறுப்பேற்ற காலத்தில் கொரானா, மற்றும் அரசுக்கு கடுமையான நிதி நெருக்கடி இருந்தது. இந்நிலையில் நுண்மான் நுழைபுலத்தால் நிதி நெருக்கடியை படிப்படியாக சீராக்கி அரசு ஊழியர்கள் எதிர்பார்க்காத நிலையில் 14 சதவீத அகவிலைப்படியினை உயர்த்தி வழங்கி, அரசு ஊழியர்களையும், ஓய்வூதியர்களையும் மகிழ்ச்சி மழையில் நனைய விட்டு மனம் குளிர வைத்தவர். ஒன்றிய அரசு அகவிலைப்படியினை உயர்த்தி வழங்கும் காலங்களில், மாநில அரசு ஊழியர்களுக்கும் அகவிலைபடியினை உயர்த்தி வழங்கி வருகிறார்.

தீபாவளி திருநாளில் அரசு ஊழியர்கள், ஒய்வூதியர்களின் இல்லங்களில் தீப ஒளி பரவட்டும். மகிழ்ச்சி நிறையட்டும் எனும் நல்லெண்ணத்துடன் 3 சதவீதம் அகவிலைப்படியினை முன் தேதியிட்டு ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கும் உயர்த்தி அறிவித்துள்ளார். இரட்டிப்பு மகிழ்ச்சியாக அக்டோபர் மாத ஊதியத்தையும் முன் கூட்டியே வழங்கி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மறு உருவமாக விளங்குகிறார். திராவிட மாடல் ஆட்சி அரசு ஊழியர்களின் அட்சயப் பாத்திரம் என்றால் மிகையல்ல.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலம், நூலகம் மற்றும் நூலகர்களுக்கு பொற்காலம். எனவே ஊர்ப்புற நூலகர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கிடவும், ஊர்ப்புற நூலகங்களை கிளை நூலகங்களாக தரம் உயர்த்திடவும் உரிமையோடும், உள்ளன்போடும் பணிவுடன் வேண்டுகிறோம்.

அகவிலைப்படியினையும், ஊதியத்தையும் முன் தேதியிட்டு வழங்கிய திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாடு பொது நூலகத்துறை அலுவலர் சங்கம் சார்பில் இதயங்கனிந்த, நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு எம்.ஜி.செல்வம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கடந்த மூன்று நாட்களில் கழிவுநீர் உந்து நிலையங்கள் மூலம்

# 2616.28 மில்லி லிட்டர் நீர் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றம்!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, அக்.21-

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களிலும் மழைநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 356 கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் 22 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 668 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட நீர் வெளியேற்றப்பட்ட வந்த நிலையில் 16.10.2024 அன்று நாளொன்றுக்கு 936.56 மில்லியன் லிட்டர், 17.10.2024 அன்று 841.02 மில்லியன் லிட்டர் மற்றும் 18.10.2024 அன்று 838.52 மில்லியன் லிட்டர் ஆகிய மூன்று நாட்களில் 2616.28 மில்லியன் லிட்டர் (அதாவது மூன்று மடங்கு அதிகமான நீர்) சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் கழிவுநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்வதற்காக 16.10.2024, 17.10.2024 மற்றும் 18.10.2024 ஆகிய மூன்று நாட்களில் 299 தூர்வாரும் இயந்திரங்கள், 73 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள், 225 ஜெட்ராடிங் வாகனங்கள் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கபட்ட 90 கழிவுநீர் ஊர்திகள் என மொத்தம் 687 கழிவுநீரகற்றும் வாகனங்களை கொண்டு 24 மணி நேரமும் 683 தெருக்களில் உள்ள 2436 இயந்திர நுழைவாயில்களில் 62770 மீட்டர் தூர்வாரும் பணிகள் மற்றும் கழிவுநீர் குழாய்கள் தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், 1 முதல் 15 மண்டலங்களில் கடந்த மூன்று நாட்களில் நீர் அகற்றும் பணிகளை மேற்கொள்ள 1886 களப்பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.



உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்றுவரும் இராயபுரம் கழக மூத்த முன்னோடி செட்டி சந்திரனை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஆகியோர் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்து அவருக்கு நிதி உதவி வழங்கினர். அதுபோது, இராயபுரம் பகுதி செயலாளர் இரா செந்தில்குமார், வட்ட செயலாளர் கிருஷ்ணன், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

